25. நிறுவனத்தில் கண்டிப்பாக மழைநீர் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

26. தேசிய கட்டிட விதி முறைகளை (என்.பி.சி) பின்பற்ற வேண்டும்.

27. 200 மாணவர்களுக்கு மேல் பயன்படுத்தப்படும் பள்ளி கட்டிடத்தில் படிக்கட்டுகள் குறைந்தது 5.7 அடி (1.8 மீ) அகலம் கொண்டதாக கண்டிப்பாக அமைத்து இருக்க வேண்டும்.

28. தேசிய கட்டிட பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் நிறுவனத்தில் மின்பாதுகாப்பு சான்றிதழ் குறிப்பிட்ட காலத்திற்குள் புதுப்பிக்க வேண்டும்.

29. தமிழக அரசு வெளியிட்டுள்ள விதிமுறையின்படி நிறுவன வளாகத்தின் உள்ளே (அ) அதன் வழியே அதிக மின் அழுத்த மின் கம்பங்களோ (அ) மின்வார ஓயர்களோ இருந்தால் மின் வாரியத்தின் ஆலோசனை பெற்று பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

30. நிறுவனத்தில் அவசர காலங்களில் எந்தவொரு இடைஞ்சல்களும் இல்லாமல் / விபத்து ஏற்படாமல் இருக்க போதுமான வெளியேறும் வழிகள் கண்டிப்பாக அமைத்திருக்க வேண்டும்.

தலைவர்.
திருவாச்சி ஊராட்சி
இரண்டாம் நிலை

பெறுதல் :-

தாளாளர்,
சாகர் கல்வி அறக்கட்டளை,
பவானி மெயின் ரோடு,
தேசிய நெடுஞ்சாலை,
திருவாச்சி கிராமம்,
சோளிபாளையம்.
பெருந்துறை.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்.

# திருவாச்சி ஊராட்சி கட்டிட அனுமதி உத்திரவு

## பெருந்துறை ஊராட்சி ஒன்றியம்

## திருவாச்சி ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திருமதி T. பேபி உமா – தலைவர்

ஓ.மு.எண்.9/2011-2012 நாள் : 15.07.2011

பொருள்: பெருந்துறை ஊராட்சி ஒன்றியம் - திருவாச்சி ஊராட்சி/கிராமம் S.F/R.S. No.147/2, 3 ல் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கி உத்திரவிடுதல் சம்மந்தமாக

- - - - -

உத்திரவு

தமிழ்நாடு 1994-ம் வருட ஊராட்சிகள் சட்டம் (பிரிவு-2(சி) ன்படி பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், திருவாச்சி ஊராட்சி கட்டிட உரிமம் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. வரைபடத்தில் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உங்களது சொந்த இடத்தில் கட்டிடம் கட்டிக்கொள்ள மராமத்து செய்ய உரிமம் (அனுமதி) வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கட்டிட உரிமம் எண் | : | 9/2011-2012 |
| கட்டிடம் கட்டும் மனுதாரர் பெயர் | : | தாளாளர்,<br>சாகர் கல்வி அறக்கட்டளை,<br>பவானி மெயின் ரோடு,<br>தேசிய நெடுஞ்சாலை,<br>திருவாச்சி கிராமம்,<br>சோளிபாளையம்.<br>பெருந்துறை. |
| கட்டிடம் கட்டும் இடம் | : | சோளிபாளையம் (சாகர் நகர்) |
| கட்டிடம் கட்டும் காலை எண். | : | திருவாச்சி கிராமம்<br>S.F/R.S. No.132/8,9,10<br>S.F/ R.S.No. 147/3, 4, 5,6 ல்<br>(Academy Block) |
| கட்டிட பரப்பளவு | : | 4210 SQM |
| கட்டிட விளக்கம் | : | RCC ROOF |
| மதிப்பீடு | : | ரூ.1,57,90,000/- |

# நிபந்தனைகள்

1. இந்த அனுமதி 15.07.2011 லிருந்து 14.07.2012 முடிய (ஒரு வருடம்) செல்லுபடியாகும்

2. அங்கீகாரம் செய்த வரைபடத்தின்படிதான் (எவ்வித மாற்றமும் இல்லாமல்) கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன் கூட்டியே முறைப்படி அனுமதி பெற்றுத்தான் கட்டிடம் கட்ட வேண்டும்

3. கொடுக்கப்பட்ட தவணைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கவில்லையானால் அதற்கு 90 நாட்களுக்கு முன்னதாக மனுக் கொடுத்து நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி அனுமதி பெற்று கட்டிட பணிகள் தொடரலாம்.

4. கட்டிட வேலை நடக்கும் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடமும், உத்திரவும் வைக்கப்படுவதுடன் ஊராட்சி தலைவர் அவர்களின் பார்வைக்கு வேண்டும் பொழுது ஆஜர்படுத்த வேண்டும்.

5. தற்பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமத்தொகை பின்பு குறைவு எனத் தெரிவிக்கப்பட்டால் நிலுவைத் தொகையினை உடனே செலுத்தி விட வேண்டும்.

6. கட்டிடம் கட்டுவதற்கும், அரசினால் வெளியிடப்பட்ட அரசாணைகளுக் கேற்ப, விபத்து ஏற்படும் காலங்களில் அதிலிருந்து எளிதான முறையில் வெளியேறும் வழிகள் அனைத்தும் மேற்படி கட்டிடத்தில் முறையான விதிகளின்படி கட்டப்பட வேண்டும்.

7. கட்டிட அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.

8. ஊராட்சிக்கு சொந்தமான நிலத்திலும், தெருவிலும், சாலையிலும், அரசுக்கு சொந்தமான இடத்திலும், பொது இடங்களிலும் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. மேற்படி கட்டிட வாசற்படிகள் முதலியனவைகள் மனுதாரரின் சொந்த இடத்தில் கட்டியிருக்க வேண்டும்.

9. கட்டிடம் கட்டும் இடத்தில் நில உரிமம் சம்பந்தமான வில்லங்கங்களுக்கு ஊராட்சி பொறுப்பல்ல.

10. சாக்கடைகள், கழிப்பறை தொட்டி முதலியன சுகாதார முறைப்படி எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான வகையில் அமைக்கப்பட வேண்டும். மேற்படி நிறுவனத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஊராட்சி வடிகாலில் சேரும் வகையில் நிர்மாணிக்கப்பட வேண்டும். ஊராட்சி வடிகால் இல்லாத பட்சத்தில் மேற்படி நிறுவனமே கழிவு நீர் வெளியேறும் வழிகளை தனது சொந்த பொறுப்பிலேயே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

11. கழிவு நீர் மற்றும் சாக்கடை கழிவு நீர்கள் ஊராட்சி சாலைகளையும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு அமைத்துக்கொள்ள வேண்டும்.

12. கட்டிடம் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்ட பின்னர்தான் மேற்படி கல்வி நிறுவனத்தில் மாணவர்களை அனுமதிக்க வேண்டும். மேலும் கல்வி நிறுவனம், கட்டிட பணிகளை தொடரும் பட்சத்தில் பள்ளி மாணவ மாணவிகளை உள்ளே பிரவேசிக்கக்கூடாது. அனுமதிக்க கூடாது. தவறும் பட்சத்தில் மேற்படி கல்வி நிறுவனமே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

13. கட்டிடப் பணிகள் முடிக்கப்படுவதுடன் அதில் பிரவேசிக்கும் முன் அதன் விபரம் ஊராட்சி தலைவருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

14. கட்டிட உரிம நிபந்தனைகளுக்கும், உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும், ஊராட்சி கட்டிட விதிகளுக்கோ அல்லது வேறெந்த கட்டிட திட்டங்களுக்கும் மாறான வழியில் உரிமம் பெற்றிருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும். அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஊராட்சி பொறுப்பேற்காது.

15. நிறுவனத்தில் நிழல் தரும் மரங்களை நட வேண்டும்.

16. நிறுவனத்தில் முதலுதவி பெட்டி, தீயணைப்பு கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

17. நிறுவனத்தில் நவீன கழிவறைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

18. நிறுவனத்தில் போதுமான குடிநீர் வசதி ஆங்காங்கே செய்யப்பட்டிருக்க வேண்டும்.

19. போதுமான அளவு மணல் அல்லது தண்ணீருடன் உள்ள தீயணைப்பு வாளிகள், தீயணைப்பு கருவிகள் வைக்கப்பட வேண்டும்.

20. நிறுவனத்தில் அறைகளின் சுவர்கள் 12 அடி உயரத்திற்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும்.

21. கட்டிடத்தில் போதுமான அளவிற்கு வெளிச்சம் கிடைக்க வசதிகள் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

22. சன்னல்கள், காற்றுப்போக்கிகள் தவிர முகட்டு ஜன்னல்களும் அமைக்கப்பட வேண்டும்.

23. புது காற்று உட்புகுமாறு வசதிகள் சன்னல்களும், காற்று போக்கிகளும் அமைக்கப்பட வேண்டும்.

24. கட்டிடத்தில் தாராளமான வழிகள் (கதவுகள்) அமைக்கப்பட வேண்டும்.